**பத்திரிகை வெளியீடு**

## TEDxColombo 2015 நிகழ்வுக்கு HUTCH அனுசரணை

இலங்கையில் மிக விரைவாக வளர்ச்சிகண்டு வருகின்ற 3G வலையமைப்பான HUTCH, தொடர்ந்து 2 ஆவது ஆண்டாகவும் TEDxColombo நிகழ்வுக்கு அனுசரணை வழங்கியுள்ளது. இந்த வருட நிகழ்வில் “Reimagining Spaces” (வாய்ப்புக்களை மீள்கற்பனை செய்தல்) என்ற தலைப்பு மீது கவனம் செலுத்தப்பட்டதுடன், Hutch நிறுவனம் இந்நிகழ்வுக்கு உத்தியோகபூர்வ இன்ரநெட் பங்காளராகச் செயற்பட முன்வந்திருந்தது. இந்நிகழ்வு அண்மையில் ஹில்டன் கொழும்பு ரெசிடன்ஸ் இல் இடம்பெற்றதுடன், அரங்கு நிரம்பிவழியும் வண்ணம் 550 பேர் இதில் கலந்துகொண்டனர்.

இந்த பங்குடமை அனுசரணை தொடர்பாக Hutchison Telecommunications Lanka (Private) Limited நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியான திருக்குமார் நடராசா அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில் “TEDxColombo மற்றும் HUTCH நிறுவனம் ஆகியவற்றின் இலக்கு ஒன்றிணைந்த ஒரு இலக்காகும். குறிப்பாக இந்த ஆண்டு நிகழ்வின் தொனிப்பொருள் Hutch இன் உண்மையான முயற்சிகளுக்கு வலுச் சேர்ப்பதாக அமைந்துள்ளது. வாய்ப்புக்களை மீள்கற்பனை செய்வது என்பது Hutch நிறுவனத்தைப் பொறுத்தவரையில் மொபைல் தொழிற்துறைக்கு மறுவடிவம் கொடுக்கும் முன்னெடுப்புக்களுடன் ஒத்திசைவதாக அமைந்துள்ளது. நாம் 2G குரல் தொழில்நுட்பத்திலிருந்து 3G/4G தரவு தொழில்நுட்பத்திற்கு மாற்றமடைகின்ற வேளையில் பாரம்பரிய முட்டுக்கட்டைகளை தகர்க்கவேண்டி உள்ளதுடன், நாடெங்கும் ஒட்டுமொத்த சமூகங்களையும் ஆளுமைப்படுத்தக்கூடிய புத்தாக்கத்தை சீர்குலைக்கும் விளைவுகளையும் அகற்ற வேண்டியுள்ளது. தற்போது நிகழ்ந்து கொண்டிருக்கும் சர்வதேச இன்ரநெட் புரட்சியில் அனைத்து இலங்கையர்களும் இணைந்து கொள்ள உதவுவதற்காக புரோட்பான்ட் அடிப்படையிலான சேவைகளின் அடுத்த தலைமுறையை நோக்கி நாம் எம்மைத் தயார்படுத்திக் கொண்டிருக்கும் இத்தருணத்தில் இந்த நற்பலனை Hutch தொடர்ச்சியாக அதிகரித்துள்ளதுடன், அதனையிட்டு பெருமைப்படுகின்றது” என்று குறிப்பிட்டார்.

TEDxColombo நிகழ்வில் நேரடியாகக் கலந்துகொள்ள முடியாதவர்களின் நன்மைகருதி நிகழ்வின் வீடியோ, ஓடியோ ஒளி மற்றும் ஒலிபரப்பு NEXT Campus மற்றும் Crescat Boulevard இலுள்ள Coco Veranda ஆகிய இடங்களில் நேரடியாக இடம்பெற்றது. எமது தலைவர்கள் மற்றும் சிந்தனையாளர்கள் தமது எண்ணங்களை முன்வைத்து மாற்றத்திற்கு வழிகோல உதவும் ஒரு களத்தை அமைக்கும் வகையில் விழிப்புணர்வை பரப்புவதற்காக இளம் தனிநபர்கள் சிலர் ஒன்றிணைந்து TEDxColombo நிகழ்வை அறிமுகப்படுத்தியிருந்தனர்.

**புகைப்படத்தில் இடம்பெற்றுள்ள காட்சி:**

இடமிருந்து வலமாக: டிலனி டி சில்வா - சந்தைப்படுத்தல் தொடர்பாடல்கள் தலைமை அதிகாரி, Hutch, ச.ஃப்ரா அன்வர் - உரிம அதிகாரி, TEDxColombo, திருக்குமார் நடராசா - பிரதம நிறைவேற்று அதிகாரி, Hutch, யுசர் கயீட் - ஏற்பாட்டுப் பணிப்பாளர், TEDxColombo, ரம்ஸீனா மொர்செத் லீ - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் தலைமை அதிகாரி, Hutch, ஜெஹான் மன்னன் - சந்தைப்படுத்தல் தொடர்பாடல்கள் உதவி முகாமையாளர், Hutch.